மனனம் செய்ய இந்த வார வசனம்:

**“என் தலைவர் என் வாழ்வுக்கு ஆதரவாய் உள்ளோருடன் இருக்கின்றார்”**

(திருபா:116:5)

வகையில், எவ்வாறு ஒரு குழந்தையைப் போல தொடர்ந்து கள்ளங்கபடற்று இருக்கமுடியும்? எண்ணற்ற கடமைகள், பிரச்னைகள், மற்றும் பலவிதமான சுமைகளைச் சுற்றியுள்ள ஒரு வளர்ந்த நபரைப் பார்த்து, “குழந்தையைப் போல் ஆகுங்கள்” என்று எப்படிக் கூறமுடியும்? அது அவ்வளவு எளிதானதா?

குழந்தைகூட ஒரு சிலசமயங்களில் தந்திரமாக இருக்கலாம். எப்போது, எதற்காக அழவேண்டும்? அல்லது யாரிடம் செல்லவேண்டும்? ஏதாவது தேவைப்படும்போதும் யாரிடம் கேட்கவேண்டும். என்று அந்த குழந்தைக்குத் தெரிந்திருக்கலாம். பெரியவர்களும் அப்படித் தான் இருக்கிறார்கள். நமக்குத் தேவைப்படுபவற்றை யாரிடமிருந்து, எப்போது, எப்படிப் பெறுவது என்று தெரிந்துவைத்துள்ளோம். நம்மிடம் இருக்கும் இதுபோன்ற குணங்களைப் பற்றி இயேசு கூறவில்லை. அதற்குப் பதிலாக, ஒருகுழந்தை, தன்னுடைய பெற்றோரை நம்பியிருப்பதுபோல, இயேசுவோடு ஒரு நேர்மையான உறவை வளர்த்துக்கொள்ள அவரையே முழுமையாக நம்பியிருக்க வேண்டும். நாம் செய்யும் அனைத்திலும், ஒரு குழந்தையைப் போல கள்ளங்கபடமற்று தந்தையை நாடிச்செல்லவும், எல்லா செயல்களிலும், அவரில் நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்ளவும் அழைக்கின்றார்.

அவரில் நம்பிக்கைக் கொண்டு, அவரையே முழுமையாக சார்ந்திருக்கிறோம் என்று உண்மையாகவே நம்மால் கூறமுடியுமா?, கடவுளை நம்பாதபோது, நாம் என்னென்ன செய்கிறோம் என்று யாக்கோபு தமது கடிதத்தில் குறிப்பிடுகிறார். பல வேளைகளில், கடவுளை நம்பாமல், அடிக்கடி நமக்குள்ளேயே சுற்றிக்கொண்டிருக்கிறோம். கடவுள் தான் நம் வாழ்வுக்கு ஆதரவாய் இருக்கின்றார் என்று திருப்பாடல் ஆசிரியர் நினைவூட்டுகிறார். ஆயினும், நிலையான, மற்றும் உறுதியான தந்தையின் அரவணைப்பைவிட, நிலையற்ற வாழ்க்கையின் கைகளை நோக்கித் தான் நாம் ஓடிக்கொண்டிருக்கிறோம். நாம் அவரை நம்பியிருக்கும்போது, உலகத்தோடு சண்டையிட்டு மல்யுத்தம் செய்யத் தேவையில்லை என்பதுதான் உண்மை.

கடவுளோடு கொண்டிருக்கும் நமது உறவை மீண்டும் சீர்தூக்கிப் பார்ப்போம். எப்போது தந்தையிடம் ஓடிவந்து அவரது காலடியில் அமர்ந்து, அவரில் நம்பிக்கை வைத்து அவரிடம் கற்றுக்கொள்ளும் ஒரு சிறு குழந்தையைப் போல இப்போதும் நம்மால் மாறமுடியுமா? ✣

**இன்றைய வாசகங்கள்:**

ஞானநூல்: 2: 12, 17-20;

திருப்பாடல்: 54: 3-6, 8;

யாக்கோபு: 3:16-4:3;

மாற்கு 9: 30-37.




*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org



19 செப்டம்பர் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 25 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்




மாதாந்திர கருப்பொருள்:

**அனைத்துலகும் ஆண்டவரைப் போற்றுக!**

# சிறு பிள்ளைகளைப் போல் ஆகுங்கள்

சீடர்கள் தங்களுக்குள் யார் பெரியவர் என்று வாதிட்டுக்கொண்டிருக்கும்போது, இயேசு அவர்களை பெரிய ஏமாற்றத்திற்கு உள்ளாக்குகிறார். அவர்களை அழைத்து, தாழ்ச்சியோடு பணி செய்யவும். குழந்தைகளைப் போல் மாறவும் அழைப்பு விடுக்கிறார். நம் ஒவ்வொருவரோடும் மீண்டும் பேசுகிறார். இந்த உலகில் சோதனைகளையும், அன்றாட உலக கவலைகளையும் நாம் எதிர்கொள்ளும்போது, எவ்வாறு சிறு குழந்தைகளைப் போல நம்மால் மாற இயலும்.? இயேசு வாழ்ந்த காலத்திலும் பதுங்கிக்கிடந்த தீமைகள் இப்போதும் நம்மைச் சுற்றி இறுக்கிக்கொள்ள காத்திருக்கும் காலக்கட்டத்தில், இயேசு நமக்கு திட்டமிட்டிருந்த வெற்றியை நாம் உரிமையாக்கிக்கொள்ளும்